# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் - 05.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 13829/SCIC/2023</u>**

திருமதி R.லெட்சுமி க/பெ.ரவிசந்திரன் — மேல்முறையீட்டாளர்
3/15/42, காளியம்மன் கோவில் தெரு
ஆனையூர், மதுரை 625 017.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர் ...... பொதுஅதிகார அமைப்பு
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
மதுரை வீட்டுவசதி பிரிவு
எல்லீஸ் நகர், மதுரை - 625 016.

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 24/04/2025 அன்று ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> 4. **இன்றைய ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில் ஆணையத்தின் முன், திரு.பி.ஆறுமுகம், பொதுத் தகவல் அலுவலர்/ கோட்டக் கணக்கர்/ உதவி கணக்கு அலுவலர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மதுரை வீட்டுவசதிப் பிரிவு, மதுரை அவர்கள் ஆஜராகி. மனுதாரருக்கு 19/01/2023, 08/03/2023 தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாகவும், மீண்டும் சமீபத்தில் 06/01/2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக இனவாரியான தகவலையும், ஆவணங்களின் நகல்களையும் அனுப்பியதாகத் தெரிவித்தார்.**
>
> 5. **மேற்குறிப்பிட்டவாறு, பொதுத் தகவல் அலுவலர் 06/01/2025 தேதியிட்டு அனுப்பிய தகவல்கள், ஆவணங்களின் நகல்கள், தனக்கு கிடைக்கப் பெற்றதாகவும், ஆனால் தனது பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் ஆவணங்களின் நகல் பிரிவில் கோரிய**

வரைபட நகல் தெளிவாக இல்லை எனத் தெரிவித்தார். அதனை ஆணையம் பரிசீலனை செய்து, மனுதாரரின் கூற்றினை ஏற்கிறது.

6. எனவே, மனுதாரர், 28/04/2025 அன்று காலை 11.00 மணிக்கு பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு செல்லுமாறும், விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு, தெளிவான வரைபட நகல் ஒன்றினை உரிய கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு வழங்குமாறும் ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. மேலும், மனுதாரர், ஆவணங்களின் நகல் பிரிவில் கோரிய இனம் 2 மற்றும் 5-க்கான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றார். அதற்கு, பொதுத் தகவல் அலுவலர், மேற்குறிப்பிட்ட இனம்-2 மற்றும் 5-க்கான தகவல் மூன்றாம் நபருக்கானது, அதனை வழங்க இயலாது எனத் தெரிவித்தார். ஆணையம் பரிசீலனை செய்து, பொதுத் தகவல் அலுவலரின் கூற்றினை ஏற்கிறது.

7. மனுதாரருக்கு, தகவல்களை வழங்குவதைப் பொறுத்த வரையில், இனங்கள் 1 லிருந்து 9 மற்றும் 11 ஆகியவற்றிற்கு மூன்றாம் நபர் தொடர்புடையது, எனவே வழங்க இயலாது என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளதை, ஆணையம் பரிசீலனை செய்கையில், அதனை ஆணையம் ஏற்கவில்லை. எனவே, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு இனங்கள் 1-லிருந்து 6, 8, 9 மற்றும் 11 ஆகியவற்றிற்கான தகவலை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவலின் நகல் மற்றும் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றினை 29/05/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய இனம் 7-க்கான தகவல் சரியானது என ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது.

மேற்குறிப்பிட்டவாறு இன்று (05/06/2025) பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.B.மாரிசங்கர், கண்காணிப்பாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மதுரை வீட்டுவசதிப் பிரிவு, மதுரை அவர்கள் ஆஜராகி, ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு மனுதாரருக்கு அனுப்பிய திருத்திய தகவலின் நகல் மற்றும் வரைபட நகல் ஆகியவற்றையும், மனுதாரரிடமிருந்து வரப் பெற்ற அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். SA 13829/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
மதுரை வீட்டுவசதி பிரிவு
எல்லீஸ் நகர், மதுரை - 625 016.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி R.லெட்சுமி க/பெ.ரவிசந்திரன்
3/15/42, காளியம்மன் கோவில் தெரு
ஆனையூர், மதுரை 625 017.

RG/PC